**S.C. No.56/2020**

**எதிரி ஆஜர்.**

**அ.சா.2 திருமதி. காமாட்சி, க/பெ. கண்ணன்**

**தேதி-14.07.2025**

**அ.சா.2 இன்று மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

சாட்சி வள்ளிக் கண்ணு என் மைத்துனர் என்றால் சரிதான். என் மைத்துனருக்கு வீடு எட்டிவாடி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்றால் 300 அடி இருக்கும். ரோடிலிருந்து வறட்டுக் குட்டை வழியாகவும் எதிரி அவரது கழனிக்குச் செல்லலாம் மற்றும் என் வீட்டிற்கும் செல்லலாம் என்றால் என் வீட்டிற்கு தான் வர முடியும், வழக்கமாக எங்கள் நிலத்தின் வழியாக தான் எதிரி செல்வார். வறட்டுக் குட்டை எங்கள் நிலத்திற்கு கிழக்கில் உள்ளது. எங்கள் நிலத்திற்கும் வறட்டுக் குட்டைக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

பன்னீர் எனக்கு பங்காளி உறவு முறை. பன்னீர், சரவணன், ராமநாதன் ஆகியோரை நான் சம்பவத்தன்று பார்க்கவில்லை என்றால் சரிதான். எங்கள் நிலம் ரயில்வேவிற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததால் பயிர் ஏதும் வைக்கவில்லை என்றால் சரிதான். எதிரி அவருடைய நிலத்தில் பயிர் வைத்திருந்தார் என்றால் சரிதான். எனக்கு சம்பவத்தில் காயம் ஏதாவது ஏற்பட்டதா என்றால் வலது கண்ணிற்கு மேலே காயம் ஏற்பட்டது. அதற்காக நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எதிரியும் அவரது மனைவிக்கும் சம்பவத்தில் காயம் ஏற்பட்டு போளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர் என்றால் சரிதான்.

எதிரியின் மனைவி பவானி என்பவர் களம்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு என் கணவர் மீதும்

என் மகன் மீதும் வழக்கு பதவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்கத் தெரியாது என்றால் சரிதான், கையெழுத்து மட்டும் போடுவேன். என் பிறந்த தேதி மற்றும் என் மகன் பிறந்த தேதி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நானும் என் கணவரும் அடிப்பட்டு இருந்தோம் என்றாலும், அடிப்பட்ட என் மகனை சேகர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றாலும், அவர்கள் எந்த நேரத்திற்கு வீட்டிறகு வந்தார்கள் என்றால் இருவரும் இருசக்கர வாகனத்தில் சென்றார்கள், வடமாதிமங்கலம் அரசு ஆரம்ப சுகாதர நிலையத்தில் என் மகன் சிகிச்சை பெற்றுக் கொண்டு அரை மணி நேரத்தில் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். அதன் பிறகு என் மகன் வீட்டிற்கு வந்தவுடன் என் கணவரின் பிரேதத்தை ஆம்புலன்சில் எடுத்துக் கொண்டு ஆரணி அரசு மருத்துவமனைக்குச் சென்றுவிட்டனர்.

சம்பவ தினம் அன்று நாங்கள் நியாயம் கேட்க எதிரி வீட்டிடம் சென்ற போது ஐயப்பன் என்பவர் எங்களுடன் அங்கு வரவில்லை. வடமாதிமங்கலம் அரசு ஆரம்ப சுகாதர நிலையத்தில் தான் நாங்கள் உடல்நிலை சரியில்லை என்றால் சிகிச்சை பார்ப்போம் என்றால் சரிதான். அங்கு எப்போதும் மருத்துவர்களும் செவிலியர்களும் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று நானும் என் மகன் மற்றும் கணவருடன் சென்றிருந்தேன் என்று சொல்வது பொய் என்றாலும், சம்பவம் நடந்து முடிந்த பின்னர் தான் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.